ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	வ்ய[illegible] வருஷ மார்கழி மீ	ஸஞ்சிகை 12

"அஹோபிலே காருட சைல மத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

—:-o-:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹ கருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹ கடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்த ஸங்காநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

——o——

189228

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

விவேகர்:—

“ उपवनसहकारश्रेणिरुद्धातपानि
प्रतिकृतमखयूपान्यत्र सैकतानि ।
चिरगतजनघोषं तीरदेशे शुकाद्याः
सवनक्रमुकनृपतीनां पोषयन्ति स्वनैः ॥ ”

இங்கே ஸரயு நதிக்கரையில் வேதகோ[illegible]முடைய அக்ரஹாரங்கள் இருந்தன. ரகுகுல மன்னர்கள் யாகம் செய்த யூபஸ்தம்பங்கள் இப்பொழுது காணப்படுகின்றன. இதனால் முன் காலத்தில் தர்ம க்ரியைகள் ஓயாமல் அநுஷ்டிக்கப்பட்டதாக அநுமாநம் செய்யக்கூடியதாயிருக்கிறது. அப்படியே இந்த உபவநங்களில் இப்பொழுதும் கி[illegible]கள், அந்நாள் கிளிகளின் பரம்பரையிலேயே பிறந்து வளர்ந்து வேதங்களை உச்சரித்து வந்திருப்பதனால் வேத சப்தங்களை உச்சரிக்கின்றன. அதனால் பழைய காலத்திலிருந்த கிளிகளின் மூதாதைகளான கிளிகள் மூன்று வேத கோஷங்களையும் ஸர்வ காலமும் கேட்டுத் தாங்களும் அப்படியே உச்சரித்துவந்தன. இப்பொழுதும் அந்தப் பரம்பரையில் வந்த கிளிகள், தங்கள் தங்கள் முன்னோர்கள் உச்சரித்த வேத ஶப்தங்களை அவிச்சிந்ந பரம்பரையாக உச்சரித்து வருகின்றன. ‘ चिरगतजनघोषं ’— ஜநங்களுடைய வேத கோஷம் பஹு காலமாக நின்றுபோய் விட்டதேயொழிய, கிளிகளுடைய வேத சப்தங்களின் உச்சாரண கோஷம் அவிச்சிந்நமாக நடந்து வருகிறதென்று ரஸம். இந்தக் கிளிகளின் மூதாதைகளில் சில, வேதங்களை ஜநங்களிடம் நேரில் கேட்டிருக்கவேணும். ஆகையால் பழைய காலத்தில் ஜநங்கள் இங்கு வேத கோஷம் செய்திருக்கவேணும். முன்னாளில் யாகங்கள் நடந்திருக்கவேணுமென்று அநுமிக்கக் கூடியதாயிருக்கிறது.

[மயிர்க் கூச்ச லெடுத்து ஸந்தோஷத்துடன்]

“ विषयविरसलभ्यं वस्तु वेदान्तवेद्यं
प्रशमयति यो यज्वानां प्रत्यवायप्रसक्तिः ।
जनकसुतया देव्या जुष्टो विभुत्वमयं सतां
उपरिसमये देवः श्रीमानुपास्यत्वामिभिः ॥ ”

‘ उपेन्द्रियानन्दं घोरं यो निशाचरजनीश्वरम् । विवेकसारजाप्येन संसेवति योगिनाम् ’ என்கிற ப்ரமாண ச்லோகம் ஸ்வாமி திருவுள்ளத்தில் இருப்பது திண்ணம். ‘ योगिनां ’ என்பதற்குப் பதிலாக ‘ यज्वानां ’

(யோகம் அப்யஸிப்பவர்களுக்கு) என்று வைத்து அதன் பொருளை விளக்கு கிறார். யோகாரூட ரல்ல; ஆருருக்ஷுக்களே என்பது பொருள்.

'விஷயம்' என்பது புலன்களுக்கு விஷயமான ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தங்கள். 'விஷயிகள்' என்பதால் ஜ்ஞாநேந்த்ரியங்களையும் கர்மேந்த்ரியங்களையும் சேர்த்துக் கொள்ளவேணும். 'வொரஶ', 'ஜநொரஜநீவாஶ' என்கிற பதங்கள் ப்ரமாண ச்லோகத்தில் உள்ளவைகளே. 'விவெகஶஜாமெந' என்பதற்குப் பதிலாக 'வூவொயஶொதூரெ:' என்று வைத்துள்ளது. இங்கே விவேகரே பேசுகிறபடியால் 'வூவொய' என்று ப்ரயோகம் போதும். 'ஶஶநயதி' என்பதற்குப் பதிலாக 'வூஶயதி' என்று படித்துள்ளது. ராவணன் என்னும் பத்துத் தலை ராக்ஷஸனை ராமன் ஸ்வல்ப திநங்களில் ப்ரஶமநம் செய்தார். யோக விரோதியான பத்து இந்த்ரியத் தலைகளையுடைய ராக்ஷஸ மநஸ்ஸை அடக்கி, யோகத்தில் நிலைநிற்கும்படி செய்ய அவ்வளவு ஸ்வல்ப காலத்தில் அவருக்கும் ஸாத்யமல்ல. 'உதூரெ:' என்ற பஹுவசநத்தால் இந்த ரஸம் காட்டப்படுகிறது. பக்தியோக நிஷ்டருக்கு அந்த யோகத்திற்கு விக்நங்களைப் போக்கி யோகத்தை ஸாதித்துக் கொடுக்கும் உபகாரத்தை முன் பாதியில் ஶரணாகதருக்குத் தேவியும் தானுமாக அபயப்ரதாநம் செய்து காப்பதை ஸாதிக்கிறார். ஸ்ரீமானான தேவன்—ஸ்ரீயோடு நித்ய யுக்தரான தேவன்—தசரதர்க்கு மகனாக அவதரித்து, ஜநகபுத்ரியாக அவதரித்த ஸீதையோடு கூடி ஸத்துக்களுக்கு அபய மளிக்கிறார்.

['ஜநகஸுதயா தெவஸ்ரீ ஜுஷ்ட:' ஜநகஸுதையாக அவதரித்த ஸீதையோடு கூடியவராய் 'ஜுஷ்ட:' என்பது' அவளால் புருஷகாரம் செய்து ப்ரீதராய்' என்ற பொருளையும்தரும். புருஷகாரம் செய்யும் ஆகாரத்தையும் காட்ட (அதாவது: ச்லோக மத்தியில்) படித்தது. அபய மளிக்கையில் ஸாஹித்யத்தை அவளை மூன்றும் பாதத்தில் முதலில் அங்கும் நாலாம் பாதத்திலும் சேர்த்துப் படிப்பதால் காட்டுகிறார். 'உயாபூ தவாரியி:' இவர் தயாபூர்ணமான அம்ருதக் கடல். ஸமுத்ர ராஜனுக் கெதிரே ஒரு நீல அம்ருதக் கடலாகி ப்ரதிஶயநம் செய்ததை ஸூசிக்கிறார். அந்த அவஸரத்தில் ஸீதை அருகே இல்லை. ஆகிலும் ஸ்ரீயோடு நித்யயோக முள்ளதை 'தெவஸ்ரீஶாநு' என்பதால் காட்டுகிறார். 'உஶரயஸுதொதெவஸ்ரீஶாநு'— தசரதன் பிள்ளை யென்பது பாவனையே. உண்மையில் ஸ்ரீயோடு பிரியாத நாராயணனென்னும் திவ்ய தேவனே.

[மிக்கஹர்ஷடித்துடன் கை கூப்பி]

"நஶஸ்ஸெஷகஸெஷஅநஹவதா நிஷ்ஶஅநஜந
ஷயஂ ரக்ஷாஶீக்ஷாஷஶயிகஷஸிஸ்யா நயஶமெ ।
ஷுராயிஶஸெஷரக்ஷணகுவிதஶாவாயுயவய
உரஷதூரஜுஜஶாத வூஶஶநவஶாஂஹொஜரஜவெ ॥"

இந்த ச்லோகம் அபயப்ரதாநஸாரத்தில் மங்கள ச்லோகம். 'வாவநஸஷ்வஷ ஞொகாநாஂ கவெவ ரவுநநூந:' என்றபடி ராமனுடைய அநுக்ரஹத்தால் ஒருவனுக்கு ஸகல விதமான அசுத்திகளும் நீங்கி உயர்ந்த சுத்தி ஏற்படும்.

பாப வாஸனைகள் நீங்கி யோகப்வரை வேணும். 'ஸர்வ பூதங்களிடமிருந்தும் அபயந் தருவது எனக்கு வ்ரதம்' என்று தாமாகத் தம் கருணை வெள்ளத்தால் அருளியது. 'ஸ்வயம்ரக்ஷாதீக்ஷா' என்பது தாமாகக் கொண்ட அந்த வ்ரதத்தைக் குறிக்கிறது. 'ரக்ஷைகதீக்ஷே' என்று ஸ்ரீ பாஷ்ய மங்கள ச்லோகத்தில் ஸ்ரீநிவாஸ ப்ரம்ஹத்தின் இந்த தீக்ஷையைக் குறித்தது. 'தீக்ஷே' என்பதால் சரணாகதரான ஸர்வ ஜநங்களைக் காற்றுகிறது என்ற யாகத்தில் தீக்ஷையைக் காட்டுவதில் ஸீதா தேவியும் தாமுமாகத் தீக்ஷிதராயச் சேர்ந்து அபய மளிப்பதைக் காட்டுகிறது. ஸீதையைப் பிரிந்த அவஸரத்தில் 'வ்ரதம்' என்று மறைவாய்ப் பேசினார். அதற்குத் 'தீக்ஷா' என்று தான் பொருளென்பதை ஸூசிக்கிறார். இந்தத் தீக்ஷையான வ்ரதம் தமக் குண்டென்பதை உலக மறியத் தாமே பஹிரங்கமாக அருளினார்.

'ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்கிற அபயப்ரதாநம் ஸர்வ ஸாதாரணம். விபீஷணர் ஒருவரை மட்டும் குறித்ததல்ல. 'நிக்ஷிம்ச நஜந' என்பதால் அதைக் காட்டுகிறார். 'யதிவா ராவண: ஸ்வயம்' என்று ராவணனையும் இதற்குப் பாத்ரமாக (அதிகாரியாக) உட்கொண்டது. 'த்வத்ப்ரபந்ந ஜநதாசோக: ஸ்லோக: ஸ்வயம் உதகாயத' என்றபடி கீதா சரம ச்லோகமும் கருணையின் மிகுதியால் தானாய் ஸ்வயம் அவர் முகத்திலிருந்து வெளி வந்தது. அதுபோலவே இதுவும்.

'நமஸ்தஸ்மை ஹவதே'— அவருக்கு நமஸ்காரம் இருக்கட்டும். 'தஸ்மை' என்பது பகவானைச் சொல்லும் ஸர்வநாம சப்தமான 'தத்' என்பதின் நான்காம் வேற்றுமை. 'தத்' என்பது பகவான் கீதையில் பொறுக்கி எடுத்த மூன்று நாமங்களில் ஒன்று. 'க:, கிம், யத், தத்' என்று ஸஹஸ்ர நாமத்தில் உள்ளதைக் காட்டி, கீதா பாஷ்யத்தில் 'க:, கிம்' (எவன், எது) 'யத், (எவன் எது) என்னும் ஸர்வ நாம சப்தங்களும் பகவந் நாமங்களென்று காட்டப்பட்டது. 'தஸ்மை' என்று 'அளவிறந்த மஹிமையுடைய அவருக்கு' என்று பொதுவாக ஒருவரைச் சொன்னது கூட ஸாஹஸமாகுமென்றெண்ணி 'கஸ்மைசந' [யாருக்கோ ஒருவருக்கு] என்று 'எவரென்று குறிப்பிட்டே சொல்லக் கூடாத வாக்கிற்கு எட்டாத ஏதோ ஒருவர்க்கு' என்று ஸாதிக்கிறார். வால்மீகியும் ராமாயணாரம்பத்தில் 'க: க:' என்று பலகால் நாரதரை வினவினார். 'எதிர் நிகழ் கழிவினும் இனனிலன்' என்றும் திருவாய்மொழி இரண்டாம் பாசுரத்தின் உரையில் 'ரம்ஹஸாய ஸ்வாஹா, கீஹஸாய ஸ்வாஹா' தாஹஸாய ஸ்வாஹா, விஹஸாய ஸ்வாஹா' ஸஹஸாய ஸ்வாஹா என்ற ச்ருதி உதாஹரிக்கப்பட்டது. 'கீஹஸாய ஸ்வாஹா' என்பதைப் போல இங்கு 'கஸ்மை சநச' என்று படித்தது.

'நிக்ஷிம்ச நஜந' என்பதற்கு 'எத்தனை' தாழ்ந்தவராயினும் அவர்களுக்கும்' என்பது பொருள். 'ஸேவாவஸ்ய ஸக்ருத் ப்ரபந்ந ஜநதா ஸம்ரக்ஷணைகவ்ரதீ' என்று தசாவதார ஸ்தோத்ரத்தில் ராமனுடைய சரணாகதரக்ஷணவ்ரதம் வர்ணிக்கப் பட்டது. 'ஸேவாயஸ்ய குதோஹதா: பாதஹ்யாயாவிசிஷ்யதே' என்ற

ராமாயணம் அயோத்யா காண்டம் 27-ம் ஸர்க்கம் 8-ம் ச்லோகத்தைப் போன்ற ப்ரயோகம். 'ஸவஜாஸ்யாதயா ஜாஸவஸ்யாவஹாவி' என்பதுறு ஸ்ரீ கோவிந்தராஜர் பொருளுரை. தயை வெள்ளமிட்டுத் தாமாக இப்படி எவரையும் காக்கும் தீக்ஷாவ்ரதத்தை உத்கோஷித்ததால் அவருடைய யஶஸ்ஸு அத்யந்தம் ஜ்வலிக்கிறது. 'அதிகாரபூர்த்தி யில்லாதவருக்கும்' எத்தனை கோரமான பாபங்கள் இருந்தா லென்ன? அவர் த்ருஷ்டி ரஜஸ்ஸுக்கும் ஸர்வ கோர பாபங்களையும் உடனே போக்கும் மஹிமை உண்டு. அப்படியிருக்கும்போது அவர் த்ருஷ்டியையே ஆச்ரயிப்பவருக்கு என்ன குறை? திருவடி ரஜஸ்ஸின் சுத்தி மஹிமையை இரண்டாம் பாதியில் அஹல்யா வ்ருத்தாந்தத்தை வர்ணிப்பதால் விளக்குகிறார்.

'ஸுராயீஶஸ்வைரக்ஷண', 'ஸுரஶ்ரேஷ்ட', 'தேவேஶ' என்று ராமாயணத்தில் அஹல்யையின் ஸம்போதநங்களை 'ஸுராயீஶ' என்பதால் காட்டுகிறார். 'தேவராஜகுதூஹலாத்' என்று விச்வமித்ரர் கதை சொன்னதையும் ஸூசிக்கிறார். 'ஸ்வைரக்ஷண'— அவனாக முநி வேஷத்துடன் வந்தான்; அழைத்து வந்தவனல்ல. தோஷ ப்ரவ்ருத்தி முதலில் அவனதே. 'க்ஷண' என்பதால் 'கச்சஶீக்ரமிதஃ' [ஓடு உடனே இவ்விடத்தை விட்டு] என்று அஹல்யை சொன்னதையும், 'நிஷ்க்ராமோடஜாத்தஃ', 'ஸஸம்ப்ரமஃ ஸ்வரஃ ஶங்கிதோ கௌதமம் த்ருஷ்ட்வா' என்று விச்வாமித்ரர், அவன் மிகப் பரபரப்புடனும் நடுக்கத்துடனும் வெளியே வந்ததை வர்ணித்ததையும் ஸூசிக்கிறார். 'வாஸவ க்ஷண கலத்ராம் யயௌ' என்று காளிதாஸர் 'க்ஷணம்' எனப் பாடியதையும் ஸூசிக்கிறார். 'தத்க்ஷணாத்' என்று இந்த்ரனுக்குக் கொடுத்த ஶாபம் தத்க்ஷணமே பலித்தது. 'குவிதஶாபாயுதயம்'— இந்த்ரன் வஜ்ராயுதனயிருந்தாலென்ன? இவர் ஶாபாயுதத்துக்கு அவன் நடுங்குவன். 'த்ரஸ்த ஸுரபதிர் ஸ்தோ விவர்ணவதநோ வஸவத்' என்று அவனுடைய நடுக்கம் வர்ணித்துக்கப்பட்டது. நமக்கு ப்ரக்ருதம் அஹல்யைக்கு வந்த சாபமும் அந்தத் தீர்க்க உக்ர ஶாபம் ஒரு க்ஷணத்தில் தீர்ந்ததுமே.

'த்ருஷத்தா ஜஜாத க்ஷணம் நவதாம்போஜராஜஸ'

"க்ஷத்ருவத்ருத ஶிலாய யதம் ந ஶாபமுக்தவயாஶிஷோபயீ ।
ஸம்ஶவ: ஸரித் க்லேஷஹிதாம் ராமவாக ரஜஸாஸுக்ரஹ: ॥"

என்று ரகுவம்ச ச்லோகத்தை 'வயோத்ருஷத்தா' 'வதாம்போஜரஜஸ', என்பதால் ஸூசிக்கிறார். ஒரு க்ஷணம் கோர துர்வ்ருத்தத்துக்கு ஆசைப்பட்டு, தீர்க்க காலம் கல் பெண்ணாய் நிற்க நேர்ந்தது. 'வயோத்ருஷத்தா' என்பது கல் உருவப் பெண்ணாயிருந்ததைக் காட்டுகிறது. 'வயோஃ ஶிலாமயீ' என்று காளிதாஸரும் இதைக் காட்டினார். 'ஹஸ்த்யாவஸ்தா ஶிலாஜஸ்ரே' என்று பாத்ம புராணத்லும் இந்த வ்ருத்தாந்தத்தின் வர்ணநத்தை ராமாயண வ்யாக்யாநங்கள் காட்டியுள்ளன. 'க்ஷஸ்வாரவ்திகா' கல்பெண் புதுமை என்று முராரி, 'ஶிலாப்ரதிமை ரூபமாகக் காணப்பட்டு வந்தாள்' என்று திலகர்.

'[illegible]' என்பது தௌர்ப்பாக்யத்தையும் கல் ஜந்மம் போன்ற ஸங்கடத்தையும் சொல்லும். '[illegible]' என்பது கொடிய பாபத்தையும் அதனால் விளைந்த கோர சாபத்தையும் சாப ஜந்மத்தையும் போக்கினதை மட்டும் சொல்லும். ராமனுக்கு நீ என் தர்ம பத்நீ ஸ்தாநத்தில் நின்று ஆதித்யம் செய்து '[illegible]' என்று கௌதமர் சொல்லியிருந்தபடி தன்னுடைய முன் லோகோத்தரமான வடிவைப் பெற்றுப் பர்த்தாவுக்கு ப்ரிய தர்ம பத்நியாக '[illegible]' '[illegible]' இருவரும் ஸங்கித்துச் சேர்ந்து தவம் புரிந்தனர். அவர்களோடே கூடித் தவம் செய்ததால் மஹா தபஸ்வியானுரென்று ராமாயணம். திருவடித் தாமரை ரஜஸ் இந்தக் கோர பாப ரஜஸ்ஸைப் போக்கிற்று. ரஜஸ்ஸு ரஜஸ்ஸைப் போக்கிற்று. ராமன் சுடரடித் தாமரை ரயிவ்ப்ரபாவத்தால் '[illegible]' என்கிற ச்ருதியில் ஸம்ஸாரத்திலிருந்து முக்தியடைந்து ஸ்வஸ்வ ரூபத்தை அடைவது போல் இவள் தன் நிஜஸ்வரூபத்தை அடைந்தாள். பாதிவ்ரத்ய பங்கம் வந்ததும் நீங்கிப் பதிவ்ரதா சுத்தியையும் அடைந்தாள். பதியின் பஹுமாநத்தையும் பெற்றாள்.

[விவேகர் சிறிது ஆலோசித்து] ஸாரதியே! பிறர் ஆக்ரமத்தால் இங்கே தர்மம் குலைந்துவிட்டது. ஸத்துக்கள் இந்தத் தேசத்தை விட்டு விட்டார்கள்.

[தொடரும்]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

வ்யய ஹூ மார்கழி மீ

1உ	திங்கட்கிழமை	...	சாப க்ருஷ்ண நவமி திதி ; த்நுர்மாஸா ராதநாரம்பம்
3உ	புதன்கிழமை	...	ஏகாதசி திதி
4உ	வியாழக்கிழமை	...	த்வாதசி திதி : ஸர்வ ஏகாதசீ (வ்ரதம்)
6உ	சனிக்கிழமை	...	அதிதி
7உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸ்ரீ தொண்டரடிப் பொடிகள் திருநக்ஷத்ரம்
8உ	திங்கட்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
19உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ (வைகுண்ட) ஏகாதசி
21உ	ஞாயிற்றுக்கிழமை	...	த்ரயோதசி – சதுர்தசி திதி த்வயம்
29உ	திங்கட்கிழமை	...	சாப க்ருஷ்ண ஸப்தமி திதி ; போகிப்பண்டிகை [மறு நாள் உஷஸ்ஸோடு தநுர் மாஸாராதநம் முடிவு]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

திவ்ய ஹவிஸ்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A.L.T., வித்வான்; திருவையாறு.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

ஸ்வாமி:—குழந்தாய்! நீ தன்னந்தனியாய் எங்கே போகிறாய்?

நான்:—இன்னும் புறப்பாடு ஆயிருக்காதென்று நினைத்து இந்தத் தெருவில் ஒரு திண்ணையில் தூங்கிவிட்டேன். புறப்பாடு ஆகிக் கண்ணன் கடைவீதியில் பாதி எழுந்தருளி விட்டார். கருடோத்ஸவம். உலகமெல்லாம் உத்ஸாஹமாயிருக்கிறது. இப்படி உலகமே களிக்கப் புருஷோத்தமன்........." எனும்பொழுது ஸ்வாமி தழதழத்த குரலில் "என்ன இது! உன் வயதைப் பார்த்தால் பன்னிரண்டு இருக்கும்போல் இருக்கிறது. யோகினிபோல் பேசுகிறாயே. உன் அன்பும் அடக்கமும் என் கண்ணாரக் கண்டேன். அது கிடக்கட்டும். ராத்ரி சாப்பிட்டாயா? உண்மையைச் சொல்லு.

நான்:—[எனக்குள்] என்ன சொல்வது? பொய் சொல்வதா? தெய்வத்தின் முன்பா பொய்! [பிறகு மெல்லிய குரலில்] ஆய்விட்டது. என்றால் பச்சைப்பொய் தான். ததீயாராதந மண்டபத்தில் இடமில்லை. இரண்டாம் பந்தியில் கொடுக்கப்பட்ட தயிர் சாதத்திற்குப் போராடிச் செல்ல என்னால் முடியவில்லை. கிடைத்ததுபோல் வந்த கொஞ்சம் சாதத்தைப் பக்கத்தில் நின்ற ஒருத்தி மேல்விழுந்து வாங்கி மறைந்தாள். களைப்பு மேலிட்டு ஒரு திண்ணையில் தூங்கினேன். இது தான் உண்மை. ஸ்வாமியின் திருவுள்ளத்தை ஏன் என் பரிதாப கதையால் புண்படுத்தவேண்டும்? அவர் எப்படியோ என்னைப்பற்றி விசாரித்து விட்டாரே.

ஸ்வாமி:—'ஸரி; வா இருவருமாகப் பெருமாளை ஸேவிக்கலாம்.' என்றார். எனக்கு நாணம் எல்லையில்லாமல் எழுந்தது. அவர் யார்! நான் யார்! என்றார். என்னை அவர் கடைக்கணித்துப் பார்க்கவும் தன்மை உடையேனோ? ஆனால் ஏதோ மந்த்ர சக்தியால் இழுக்கப்பட்டவள்போல் அவர் பின்னால் நடந்தேன். பசியினாலும் வெயிலாலும் களைத்திருந்தபோதிலும் அவருடன் நடந்தபடியால் நலிவேதும் நான் உணரவில்லை. பந்தலடி மண்டபத்தில் பரந்தாமனைக் கண்ணாரக் கண்டேன். விநதை சிறுவனான ஸ்ரீ கருடன்பேரில் ஜகந்மோஹநன் சாய்ந்து தன் முழு மிடுக்கும் விளங்கத் தன்னைக் காண விரைந்து வரும் ஆயிரக் கணக்கான ஜனங்களின்மேல் தன் குளிர்ந்த செந்தாமரைக் கண்ணின் அருள்நோக்காகும் அமுதை வாரி இறைத்துக்கொண்டிருந்தான். சாய்ந்த கிரீடமும், நிமிர்ந்த மார்பும், பொலிவுற்ற மணிப் பூண்களும், அபய ஹஸ்தமும், பெரியதிருவடியின் தோளில் ஊன்றிய ஒரு திருவடியும், மடித்து வைத்துக்

கொண்ட மற்றத் திருவடியும், எம்பெருமானின் தோற்றம் காணக் கண் கோடி வேண்டியதாயிற்று.

ஸ்வாமி மெய்ம்மறந்து த்யானத்தில் நின்ருர். அவரது பால் வடிவும், பாலன்ன வஸ்த்ரமும், த்வாதஶ ஊர்த்வபுண்ட்ரமும் அவருக்கு ஒரு தெய்வீகத் தோற்றத்தை அளித்தது. ஓர் அப்ராக்ருதமான ஜோதி மண்டலத்தின் வாயிலாக வைகுந்தத்திலிருந்து பூமியி லிறங்கிப் பூவைப்பூ வண்ணனை கண்ணனைக் காணவந்த ஒரு நித்யஸூரிபோல் விளங்கினர்.

"எழுந்தருளவேண்டும். இபப்டிக் கிட்ட வரவேண்டும்" என்ருர்கள் பட்டர்கள். ஸ்வாமி மண்டபத்தின்மீது ஏறிக் கண்ணனைக் கண்ணிற் கண்டார். அவனை நானும் வாழ்த்தினேன். பிறகு ஆற்றங்கரைப் பக்கம் தான் சென்று தன்பர்களைச் சேரவேண்டு மென்றும், நானும் அங்கே வந்தால் எம்பெருமான் சப்பரத்தில் எழுந்தருளும்பொழுது உடனே வந்துவிடலா மென்றும், அப்படி இஷ்டமில்லாவிட்டால் நான் சென்று சேரவேண்டிய இடத்திற்குக் கொண்டு விடுவதாகவும் சொன்னர். நான் திடுக்கிட்டேன். என்னை ஏன் இவர் இப்படிப் பொருள் செய்கிருர்? நான் செல்ல வேண்டிய இடந்தான் எது? என்று நினைத்தேன்.

ஸ்வாமி:—குழந்தாய்! கமலா வஞ்சுளம் அவர்கள் புருஷன்கள் யாவரும் ஆற்றங்கரையில் பகவத் ஸேவைக்குக் காத்திருக்கிருர்கள். நாம் அங்கே போகலாம். உனக்கு உன் தாய் தந்தையர் கோபிப்பார்களென்று பயமாயிருக்கிறதா?

நான்:—"ஸ்வாமி! என் தாய் தந்தையர்கள் என்னைப்பற்றிக் கவலையே படமாட்டார்கள். நான் வீட்டின் பக்கம் நாலைந்து நாள் போகாவிட்டாலும் என்னைப் பற்றி அவர்கள் நினைக்கவே மாட்டார்கள். இப்பொழுது எங்களுக்கு இந்த ஊரில் வீடேது? நான் எங்கேயானலும் செத்துக் கிடந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. எனக்குக் கல்யாணம் ஆகவில்லை யென்று அவர்கள் படும் பிடுங்கல் இந்தப் பரந்தாமனே அறிவான். நான் இறந்தால் அவர்கள் நெஞ்சில் ஒரு பெருங்கவலை ஒழியும். என்னை யார் மணப்பார்கள்? என் முகத்தைப் பார்த்து, என்னை மநுஷியாக மதித்துத் தேவரீர் தான் பேசியது. என்னை யாராவது மணப்பார்களோ? ஐயோ நான் ஏன் பிறந்தேன்" என்று சொல்லிப் புடவைத் தலைப்பால் என் வாயை மூடிக் கொண்டு அழுதேன்.

உடனே ஸ்வாமி அன்புடன் "குழந்தாய், நீ எவ்வளவு புத்திசாலி! இப்படித் திடீரென்று ஏமாந்து போனயே. நான் ஏன் பிறந்தேன் என்று நீ நொந்துகொண்டால் அது உன்னைப் படைத்த உத்தமனது செயலில் குறைகூறுவதுபோ லல்லவா இருக்கிறது? உனக்கு அழகு நீ செய்துகொண்டதா? அல்லது அழகு என்பது முகத்தில் காண்பதுதான? உயிரைக் கொள்ளை கொள்ளும் நல்ல பாம்பினிடம் அழகு இருக்கிறது. விஷ மூலிகைகளில் அழகு இருக்கிறது.

என்ன ப்ரயோஜநம்? அழகு அபாய மன்றோ? ஏன் அழுகிறாய்? எனக்கு மனைவியில்லை; குழந்தை இல்லை; உற்றாரில்லை; என்னை உன் பந்துவாக நினைத்துக்கொள்'' என்றார். சிறிது ஆழ்ந்து ஆலோசித்துப் பார்த்தேன். தெய்வ சிந்தனை செய்த மஹா பாதகத்தை உணர்ந்தேன். என் மனக்கண் திறந்தது. வெகு துயரத்துடன் ''ஸ்வாமி! தெரியாமல் இந்த மஹாபசாரத்தைச் செய்துவிட்டேன். என்னை எப்படி வைக்கவேணுமோ அது வாஸுதேவன் அதீந மன்றோ? அவன் செயலை முணுமுணுப்பது அவனிடத்தில் மஹாபசார மன்றோ? நான் ஏன் இப்படி இருக்கக்கூடாது. சீ! பரம பாபி! பரம முட்டாள்........'' என்று சொல்லிக் கைகுவித்தேன். பிறகு, ''தேவரீருடன் ஆற்றங்கரைக்கு வந்து தேவரீர் ஜனங்களுடன் இருக்கிறேன். கிடைத்த இடத்தில் சாப்பிட்டு, ஒழிந்த இடத்தில் படுக்கவேண்டியவ ளாகையால், என்னை என் பெற்றோரும் தேடமாட்டார்கள்'' என்றேன்.

ஸ்வாமி :—''அம்மா! நீ சிறு பெண்ணாயிற்றே! அப்படி இருக்கலாமா ?''

நான் :—[சிரித்துக்கொண்டு] ''கூடாது தான். உண்ணச் சோறில்லாத என்போன்ற ஏழையர்கள் எப்படி வீட்டில் வாழமுடியும்? இந்தப் பத்துநாள் ஆஹாரம் கிடைத்தால் அதுவும் நல்ல வாழ்வுதானே. யார் என்ன பேசினாலும் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். எங்களுக்கு உணர்ச்சி கூடாது. எங்கள் உடம்பும் மனமும் மறத்துப்போய்விட வேண்டியதுதான். விசேஷமாக என்போன்ற குரூபிணிகள் எங்கே இருந்தாலென்ன? ஏதும் இடர் வராது.''

ஸ்வாமி :—''குழந்தாய்! என் காதுகேட்க உன் ரூபத்தைப்பற்றி இனி நொந்துகொள்ளாதே. அது அஸஹ்யமான பகவதபசாரம். பெரியோர்கள் நோயையும் அவலக்ஷணத்தையும் பெருங்களிப்புடன் ஏற்றுக்கொள்வார்கள். எம்பெருமானது லீலைகளை யார் கண்டார்? உன்னிடம் விசேஷ க்ருபையினாலே இச்செயல் நிகழ்ந்திருக்கலாம். மேலும் வடிவத்தையிட்டு மதிப்பல்ல; குணங்களாலேதான் என்பதை நீ உணரவேண்டும். ரூபமில்லாத உடலில் மிகவும் அழகிய – மிகவும் தூய்மையான – மிகவும் அன்புள்ள – ஹ்ருதயம் இருக்கலாம். முட்களிடையில் ரோஜா விளங்குகிற தல்லவா! வா; மெதுவாக நடக்கலாம்.''

நான்கு நாளாயிற்று. ஸ்வாமியைப்பற்றி வெகுவாகக் கேள்வியுற்றேன். அவர் சிறந்த ஞானி யென்றும், தநிக ரென்றும், பரோபகாரி யென்றும், தலங்கள் தோறும் ஸர்வேச்வரனுடைய தொண்டிலும் ஏழைமக்களின் பிணிகளை நீக்குவதிலும் தம் வாழ்நாளைக் கழித்து இன்புறுவதாகவும் கேள்வியுற்றேன். அவருடைய தர்மசிந்தனையைப் பேசாதவ ரில்லை.

தோடியில், தேவாதிதேவனது ஸேவைக்குப் பிறகு அவரைப் பார்த்தேன். ஊருக்குப் போய்வர உத்தரவு கேட்டேன். என்னை நாலைந்து நாளாய் அவர் வேளை தவறாமல் போஷித்ததை மறக்கமுடியா தென்றேன். வஞ்சுளம் அம்மாமி கொடுத்த இரண்டு பட்டுப் புடவைகளைக் கட்டிக்கொள்ளத் துணிவு

வரவேண்டும் என்றேன். என் நெஞ்சு அடைத்துக்கொண்டது. இனி என் வாழ்வான இருளுக்கு எப்படித் திரும்புவது என்று துக்கப்பட்டேன். கண்ணீர் பெருகிற்று. ஸ்வாமி என் சிரஸ்ஸில் கைவைத்துத் தடவி, "குழந்தாய்! வருந்தாதே. உனக்கு வாஸுதேவன் மணம் செய்துவைப்பன். நீ க்ஷேமமாயிருப்பாய். நான் பக்கத்தில் கோட்டூர் க்ராமம் தான். அடிக்கடி உன்னை வந்து பார்க்கிறேன்" என்றார். என் உடல் ப்ரசாந்த மாயிற்று. திவ்யஸூரியின் ஹஸ்த மல்லவா அது! அன்றே ஊருக்குப் போனேன். ஐந்தாறு மாத காலம் ஸ்வாமியின் தர்மத்திற்கு அளவில்லை. நெல்லும், வேறு தான்யங்களும், புடவையும், வேஷ்டியும், எங்கள் குடும்பத்திற்கு ஏராளமாய் வழங்கினார். வயிறாரச் சாப்பிடக் காலம் வாஸுதேவன் காட்டினான். இது மாத்ரமா? கோட்டூரில் ஒரு கல்யாணத்திற்கு என்னையும் என் தாயையும் தந்தையையும் ஸ்வாமி அழைத்துச் சென்றார். அங்கேயும் கநகாபிஷேகம்தான். கண்ணன் கண் கொடுக்கும் தெய்வம் என்பதை என் விஷயத்தில் காட்டினான் போலும்!

தெப்பத் திருநாள். ஸ்ரீ ராஜமன்னார் ஹரித்ரா நதியில் பவனி வருகிறார். வாத்யகோஷம் காதில் இன்பமாக விழுகிறது. அதற்கிடையிடையே வேதகோஷமும் கீதகோஷமும் கலந் தொலிக்கின்றன. என் தாய்க்குப் பக்கத்தில் நான் வடகரை மேற்குக் கோடியில் நின்றேன். ஸ்வாமி அங்கே வந்தார். நான் பட்ட ஸந்தோஷத்திற்கு எல்லையில்லை. என் தாயுடன் லோகாபிராமமாகப் பேசிவிட்டு, ஸ்வாமி, "கல்யாணியின் அப்பா எங்கே?" என்றார். என் தாய், "கல்யாண காலம்; வயிற்றுப் பிழைப்பிற்காகச் சுற்ற வேண்டியிருக்கிறது" என்றாள். ஸ்வாமி ஆரம்பித்தார்.

"நான் சொல்வதில் நீங்கள் திடுக்கிடலாம். எவ்வளவு முயன்றும் ஒருவரும் கல்யாணியைக் கல்யாணம் செய்துகொள்ள முன் வரவில்லை. குழந்தைக்கோ வயது இருபதாகப் போகிறது. இனியும் பேசாமல் இருப்பதில் பயனில்லை எப்படியாவது......"

தாய்:—ஸரிதான். ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும், அந்தப் பிசாசை...

ஸ்வாமி:—அம்மா! குழந்தையைத் திட்டாதீர்கள். மேலே......

தாய்:—ஆர் பண்ணிக்கிறு? எனக்கு இருக்கிற வயத்தெரிச்சல், இந்த ஹரித்ரா நதியிலே ஒரு கல்லைக் கட்டி க்ருஷ்ணார்ப்பணம்னு போட்டுடலாம்....

ஸ்வாமி தழதழத்த குரலில், "அம்மா! எனக்கு மனைவி இறந்து பதினைந்து வர்ஷ மாகிறது. நான் பண்ணிக்கொள்ளுகிறேன். எனக்கு வயது நாற்பத்தெட்டானாலும்......, உங்கள் குழந்தையை இந்தக் கெட்ட பேரில்லாமல், ஜனங்களின் அவச்சொல் இல்லாமல் வைத்துக்கொள்கிறேன். அவளுக்குத் தாலி கட்ட நானே முன் வருகிறேன்" என்றார். என் தாய்க்குப் பேராச்சரிய மாயிற்று. நான் திடுக்கிட்டேன். அவர் என்னை மணக்கவா வந்தார்? மஹா பாபியான என்னிடம் கருணைகொண்டு என்னை வாழ்விக்க

இசைந்திருக்கிறார். தன் பெயர் பொருள் எல்லாவற்றையும் எனக்காக த்யாகம் செய்யத் துணிந்த பரமதயாளு. நான் இவரை மணப்பதா! மணக்கலாமா? சீ! சீ! உயர்ந்த கலவைச் சந்தனத்தைக் காலிலா அணிவது? மார்பிலன்றோ தரிக்க வேண்டும். இம்மஹானுபாவனை மணப்பதா? சீ! இருளுக்கும் ஒளிக்கும் சேர்த்தி உண்டா! பாபத்திற்கும் புண்யத்திற்கும் சேர்த்தி உண்டா! அவர் செய்த மஹத்தான த்யாகத்தைப் பாராட்டி நான் என் நிலையை உணரவேண்டும். வாழ்வில் என் ஸ்தானத்தை உணர்ந்துகொள்ளவேண்டும். பரம ஏழைகளாகிய என் பெற்றோர்கள் இதை மறுப்பார்களா? மாட்டார்களே. கண்ணா! நீதான் இந்தச் சோதனையிலிருந்து காப்பாற்றவேண்டும். என்னால் அந்த மஹானுபாவனுக்கு ஒரு களங்கமும் நேராமற் காப்பாற்று" என்று சொல்லிச் சிந்தனையி லாழ்ந்தேன். பிறகு என்தாய் என்ன சொல்லப்போகிறாளோ என்று அவளையே நோக்கி நின்றேன். "ஏதோ! பகவத் ஸங்கல்பம்! நூறு வயஸான கிழவனானாலும், உண்ணச் சோறில்லாமல், இருக்க வீடில்லாமல் போனாலும், கன்னி கழிஞ்சுதென்னு ஒரு ஆம்பிள்ளை யிடம் தள்ளித் தலை முழுகணும்னு இருந்தோம். அதுவே நிறைவேறலை. தங்கமான குணமும், குபேர ஸம்பத்துமுடைய தேவரீர் கேட்பதையே நம்ப முடியவில்லை. அவர் வந்தவுடன் கோட்டூருக்கு வரச்சொல்றேன். தெய்வ ஸங்கல்பம்" என்றாள். குற்றப் பத்ரிகையில் விடுதலையைப்பற்றிக் கேள்வியுறும் குற்றவாளிபோல் நான் களித்தேன். என் தந்தையிடம் நான் இவரை மணக்கக்கூடாது என்று சொல்லத் துணிந்தேன். த்யாக மென்றால் இதுவன்றோ த்யாகம்! இவர் தம்முடைய அழகு குணம் பொருள் எல்லாவற்றையும் சாக்கடையி லன்றோ பாழ்படுத்த விரும்பினார். எவ்வளவு பக்வமான வயதுடைய ஏழைப் பெண்கள் இவர் அழகுக்கு ஒத்தவராகக் கிடைப்பார். சீ! அவரை மறக்க வேண்டும். மறக்க வேண்டும். என்ன மஹானுபாவன்!

என் தந்தை வந்தார். வரும்பொழுதே அவருடன் யாரோ ஒரு மனுஷ்யரும், இரு ஆண்பிள்ளைகளும் ஒரு கிழப்பாட்டியும் வந்திருந்தனர். என் விதி தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தது. தஞ்சாவூரில் பிறந்தவர்களாம். மன்னார்குடியில் 'க்ளப்' தொழில் செய்கிறானாம். அவனுக்கு என்னைக் கொடுப்பதாகத் தீர்மானமாய் விட்டதாம். பையன் வடிவத்தை உற்று நோக்கினேன். என் மனம் நிம்மதி யடைந்தது. எனக்கேற்ற கணவன். நல்ல கறுப்பு. நல்ல உயரம். பழுப் பழுவாய் எலும்புகள். கிணறுபோல் குழிந்த கண்கள், நீண்ட மூக்கு. தடித்துத் தொங்கிய உதடுகள். நீண்ட கழுத்து. மற்றொருவர் அவர் அண்ணனாம். பாபநாசத்தில் வக்கீல் குமாஸ்தாவாம். கிழவி இவர்கள் தாயாராம். பெண்ணைப் பார்த்துப் பிடித்தால் பண்ணிக் கொள்வதாகச் சொன்னார்களாம். கல்யாணச் செலவு எவ்வளவு சிக்கனமாய்ச் செய்யலாமோ அப்படி என் தந்தை செய்துகொள்ளலாம் என்றார்களாம். ஸ்வாமி என்னை மணக்க விரும்பியதை என் தந்தை நம்பவில்லை. அது நடக்காத காரியம் என்று என் தாயையும் நம்பச்செய்தார். என் விதி சுருசுருப்புடன் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தது. விஸ்தரித்துச்

சொல்லி என்ன பயன்? கல்யாணமும் ஆய்விட்டது. இரண்டொரு நாள் கழிந்ததும், நான் மன்னார்குடி ஹரித்ரா நதி மேல் கரையில் ஒரு வீட்டில் குடித்தனம் ஆரம்பித்தேன். வாடகை வீடு. வீடு என்றுதான் சொல்ல வேண்டும். கிளப்புக்கார ராமுவைத் தெரியாதவர் யார்? அவருக்கு வயது நாற்பத்தைந்து தானும்! என் புருஷன் காலையிலேயே எழுந்து ஊர்சுற்றி வருவார். நான் இட்டிலிகள் தயாரித்து வ்யாபாரம் செய்து, பணத்தைத் தயார் செய்து அவரிடம் கொடுக்கவேணடும். அத்துடன் மத்யானம் கோர்ட்டுக்குப் பலஹார வகைகள் காப்பி எடுத்துப்போய் விற்று வரவேண்டும். ஒருவர் அவரைப் பார்த்து, "இப்படிப் பெண்பிள்ளையைப் போகச் சொல்லுகிறாயே; நீ போகக் கூடாதா?" என்று கேட்க, அவர் சொன்ன பதில் யாதென்றால்: "மஹாராஜா வீட்டுப் பெண்ணோ? பின்னே எதுக்குத்தான் கல்யாணம் பண்ணிக்கிறது? மோரையைப் பாத்தா வாந்தி வறது. இந்த வேலை செய்யலேன்னு பின்னே என்னதான் செய்யப்போறா" என்றார். அவர் சொல்றது வாஸ்தவம்தானே. நான் என்ன பெரிய ராஜ ஸம்ஸ்தானத்தில் பிறந்தவளா? என் வயதுக்கு நான் ஏன் உழைக்கக்கூடாது என்று நான் ஸமாதானம் செய்துகொண்டேன்.

[தொடரும்.]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

வ்யய ஹூ தை மீ

1உ	செவ்வாய்க்கிழமை	... உத்தராயண புண்ய காலம்: மகர ரவி–4-17 மகர க்ருஷ்ண அஷ்டமி திதி
4உ	வெள்ளிக்கிழமை	... ஏகாதசி திதி
5உ	சனிக்கிழமை	... ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசீ (வ்ரதம்)
8உ	செவ்வாய்க்கிழமை	... அமாவாஸ்யை திதி; ஸர்வ அமாவாஸ்யை
9உ	புதன்கிழமை	... அதிதி: 42-ம் பட்டம் ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
10உ	வியாழக்கிழமை	... மாக சுக்ல ப்ரதமை திதி
16உ	புதன்கிழமை	... ஸப்தமி – அஷ்டமீ திதி த்வயம்; ரத ஸப்தமி
17உ	வியாழக்கிழமை	... நவமி திதி
19உ	சனிக்கிழமை	... மகர சுக்ல ஏகாதசி திதி
20உ	ஞாயிற்றுக்கிழமை	... ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசீ (வ்ரதம்)
21உ	திங்கட்கிழமை	... 38-ம் பட்டம் திருக்குடந்தை ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
23உ	புதன்கிழமை	... தைப் பூசம்
24உ	வியாழக்கிழமை	... ஸ்ரீ திருமழிசைப்பிரான் திருநக்ஷத்ரம்
27உ	ஞாயிற்றுக்கிழமை	... ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்
30உ	புதன்கிழமை	... மகர க்ருஷ்ண ஸப்தமி திதி; கும்பரவி 31-33

[தர்ப்பணம்]

189228
சென்னை-600 008

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ இராமாவதாரம்

[ஸ்ரீ. உப. தார்மிக ரத்ந ப்ரதீப N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட்,
மதுரை.]

கம்பராமாயணம் என்று வழங்கும் நூலுக்குக் கம்பர் ‘இராமாவதாரம்’ என்று பெயரிட்டார். வடமொழியில் வால்மீகி வகுத்துள்ள நூலுக்கு அவர் ‘இராமாயணம்’ என்றும், ‘ஸீதையின் உயர் சரிதை’ என்றும், ‘பௌலஸ்த்ய வதம்’ என்றும் மூன்று பெயர்கள் இட்டிருக்கிறார். இவ்வடமொழி நூலின் ஆராய்ச்சியாளர்கள், ‘எல்லா உலகுக்கும் இறைவனாகிய ஈசுவரன், தன் மேற் பதவியிலிருந்து மனிதனாகக் கீழே இறங்கி வந்தானா? அல்லது மனிதப் பிறவியினராகிய சூரிய குலத் தோன்றல்களாய் அறத்தின் வழி நிற்றலில் ஒருவரையொருவர் மேம்பட்டு, எல்லாத் தெய்வப் பெருமைகளையும் வென்று, மேற் சென்றவருள் மானிடப் பிறப்பின் உயர்வை யடைந்தவன் இராமனா?’ என்பதைப் பற்றிப் பல துறைகளிலும் ஆராய்ந்து, அவரவர் கொள்கையே சிறந்தது என்று முடிவு கட்டியுள்ளார்கள். இவ்விரு முடிவுகளுக்கும் தக்க ஆதாரங்கள் வான்மீகியார் இராமாயணத்தில் மலிந்து கிடக்கின்றன. இதனை நன்குணர்ந்த கம்பர், தாம் செய்யும் நூலில் இவ்வித முரண்பாடான கொள்கைக்கு இடமிராதவண்ணம் வைகுண்டபதியான லக்ஷ்மீ காந்தன் இராமனாகக் கீழே இறங்கி வந்தான் என்பதை வெளிப்படையாகச் சொல்லி, அதற்கு இணங்கவே இந்த இராமாவதாரம் என்னும் நூலை நடத்துகிறார். இது,

“………… வரம்பில் இவ்வுலகத்தோர் யாவரும் தவஞ்செய் தேறுவான் ஆதரிக்கின்ற அவ்வுலகத்தோர் இழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்திமா நகரம்”

“பொங்குமா தவமும் தருமமும் புணர்ந்தோர் யாவர்க்கும் புகலிடமான செங்கண்மா லிருந்தாண் டளப்பருங் காலம் திருவின் வீற்றிருந்தமை” என்னும் பாடல்களால் வெளியாகும்.

மேலும் இருடிகள் பேச்சுக்களிலும், ஞானிகள் பக்தர்கள் துதிகளிலும், மற்ற இடங்களிலும், வான்மீகியார் போக்கு ‘ஸத்யமும் தருமமும் இராமனை யடைந்து பெருமை யுறுகின்றனவா? அல்லது இராமன் அவைகளைக் கடைப்பிடித்து மேன்மையுற்று விளங்குகிறானா?’ என்னும் ஐயப்பாடு ஆங்காங்குத் தோன்றும்படியே அமைந்து கிடக்கிறது. கம்பர் வாக்கில் இவ்வித ஐயப்பாடு அறவே ஒழிந்துபோய், ஸர்வேசுவரனாகிய இவனைப்பற்றி நிற்கும் பாக்கியம் பெற்றுத்தான் வேத சாத்திரங்களின் முடிவுகளான அறமும் வாய்மையும், மேன்மையும், பெருமையும் பெற்று விளங்குகின்றன என்பது தெளிவாகச் சொல்லப்பெறுகின்றது. விராதன் துதி முதல் கருடன் துதி யீறாகக் கம்பர் கூறும் துதிக ளெல்லாம், இராமனை ஊழிமுதல்வனாகவும் இறைவனாகவும் அவன் தெய்வத்திருவைச் சுட்டியே பேசுகின்றன.

கம்பர் கவித்திறனும், சொல்லாற்றலும், பொருள் முடிவுகளின் நுண்ணிய அறிவும், உணர்வும், வடமொழி தென்மொழிகளாகிய இருமொழிகளிலும் அவர் காலத்திலிருந்த அரிய பெரிய நூல்களில் அவருக்கிருந்த பெரும் பயிற்சியும், ஆழ்ந்த ஆராய்ச்சியும், எல்லாக் கலைத்துறைகளிலும் அவர் அடைந்திருந்த தேர்ச்சியும், இன்று இராமாவதாரத்தைப் படிப்போர் உணருங்கால் திடுக்கிடச் செய்பவையா யிருக்கின்றன. இத்திறத்த கல்வியிற் பெரியார், வான்மீகியார் இயற்றியது போல, இரண்டுபட்ட கொள்கைக்கு இடம் தரத்தக்க இராமாயணம் இயற்ற வல்லவர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஆனால், இவர் இராமனை அவதார மாக்கியதற்கு நான்முகத்தால் தெளியக் கிடக்கும் சில குறிப்புக்களை ஆராய்வாம்.

சங்கநூல்கள் கண்ட எல்லா நன் முடிபுகளும் வள்ளுவர்வாய்ச் சொல்லிற் செறிந்து கிடப்பதும், அவைகளும் பிற்காலத் தமிழ்ப் பெரியார் கண்ட பொருள்களும், எல்லாம் கம்பரது இராமாவதாரத்திற் பதிந்து மிளிர்வதும் தமிழ்ப் பெருமையும் தமிழர் பெருமையும் ஆகும்.

இறைவனடி சேர்ந் துய்தலே, பிறவி, கல்வி, அறிவு, வாழ்க்கை முதலியவற்றின் பெரும்பயனாகும் என்பது வள்ளுவர் வாய்ச் சொல்லாகிய கடவுள் வாழ்த்திற் பரக்கப் பேசப் பெற்றது. இதைச் 'சரணாகதி' என்று சாத்திரங்கள் பேசுவன. இதைச் சொல்வதில் தலைசிறந்த நூல் 'இராமயணம்' என்பது ப்ரஸித்தம். இவ் அடிசேர்த்தலுக்கு இலக்காவான் இறைவன் ஒருவனே என்பது, சகல சாத்திரங்களின் முடிவாகும். இதனை,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவ னடி சேராதார்" [இறைவனடி சேர்ந்தார் பிறவிக்கடல் நீந்துவர்; சேராதார் நீந்தார்] என வள்ளுவர் கடவுள் வாழ்த்தின் இறுதிப் பாட்டால் அறுதி யிட்டுப் போந்தார்.

பரிமேலழக ருரையைப் பரிந்து படிப்போர்க்கு வடமொழி வேத சாத்திரங்களிற் கண்ட எல்லா அரும் பெரு முடிவுகளும் வள்ளுவர் குறளில் அமைந்து கிடப்பதும், குறள் உலகியன் முறையில் ஆக்கப்பெற்று ஒழுக்க நிலையை வற்புறுத்த வுதித்த சொல்லொளி யென்பதும் இனிது விளங்கும். இராமனை இறைவன் என்று கொள்ளாது மனிதன் என்று கொள்ளுதல் இவ்வள்ளுவர் கொள்கைக்கு முரண்படுமாதலின், 'இராமன் மனிதன்' என்னும் கொள் கம்பர் இடம் தரவில்லை.

ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்கள், சரணாகதியைப் பேசுங்கால் இராமாயணத்தின் ஆதாரத்தைக் கொண்டு பேசுவன. ஆழ்வார்களில் இராமாயணத்தில் மிக்க ஈடுபாடு உடையவராகவும், இராமனையே பரம்பொருளாக நினைத்தவராகவும் இருந்தவர் சேரமன்னராகிய குலசேகரப் பெருமாள். அவர் இயற்றிய பெருமாள் திருமொழியின் கடைசிப் பதிகத்தில் இராமாயணத்து ஏழு காண்டங் களினுள் ... ... அரிய பெரிய பொருள்களை யெல்லாம் பதினொரு பாடலில்

துலக்கிப் படிப்போர், பார்ப்போர், கேட்போர், அடையும் பயனொடு கூறியுள்ளார். அவர் 'உலகனைத்தும் விளக்கும் சோதி அயோத்தியில் வந்து பிறந்தது' என்று எடுத்து, 'விண் முழுதும் எதிர்கொளத் தன் தாமம் மேவி' என்று முடித்துப் பரந்தாமனே இராமனுஜன் என்ற அவதார தத்துவத்தை நிலை நாட்டியுள்ளார். இது போலவே தான் மற்ற ஆழ்வார்களும் இதில் கண்ட முடிவு.

சைவ வைணவ சமயங்களை நிலைநாட்டியவர்களாகிய நாயன்மார்களும் ஆழ்வார்களும், அங்கங்கே திருக்கோயில் கொண்டு காட்சி யளிக்கும் பெருமான்களைப்பற்றிப் பதிகங்கள் பாடி, அவர்கள் தரிசனமும் பூசையும் கைவல்யாதி மோக்ஷங்களாகிய பயன்களை அளிப்பன என்று கூறிப் போந்தார்கள். இராம விக்ரஹ வழிபாடு இறைவன் வழிபாடாவதற்கு, இராமன் அவதாரமாக வேண்டும். இன்னும் பல காரணங்கள் இருப்பினும் இவை முக்கிய காரணங்கள் ஆவன.

கம்பராமாயணத்துள் ஒரு பாசுர வுரை

[ஸ்ரீ. உப. தார்மிக ரத்ந ப்ரதீப N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், மதுரை.]

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலை(யையுடைய) இராமன் (தோள்வலி) வீடியல் வழியதாக்கும் வேரியங் கமலை நோக்கும் தோள்வலி கூறுவார்க்கு நாடியபொருள் கைகூடும்; ஞானமும் புகழும் உண்டாம்: என்பது கொண்டுகூட்டு. (அந்வயம்)

தன் வீரத்தை வில்வலியால் இராமன் உலகுக்கு உணர்த்தினன். அவ்வில் அஸுர ராக்ஷஸர்களை அறவே பொசுக்கியொழித்து வெற்றிமாலை சூடியது. அதைத் தாங்கிநிற்கும் தோளோவென்றால், எல்லா உயிர்களுக்கும் மோக்ஷமடையும் வழிகாட்டி, அந்த மோக்ஷ மடைதலைப் புருஷகாரத்தால் ஸாதித்துத் தரும் பெரியபிராட்டி தன்னுடைய விடுதலை அதனால் ஏற்படவேண்டு மென்று அதன் வலியையே நோக்கி (எதிர்பார்த்துக்கொண்டு) அசோக வனத்துத் தவங் கிடத்தற்கு லக்ஷ்யமாயிருந்த தோள்.

வாகை சூடிய வில்லினை யணிந்ததும் வேரியங் கமலை நோக்குவதுமான தோள் எனினும் ஆம்.

தோளைச் சீதை நோக்க, அதில் அணிந்த வில் அசுர ராக்ஷஸர்களை வென்று வாகை சூடுகிறது; வீரலக்ஷ்மியும் விஜயலக்ஷ்மியும் இவளே யாதலின்.

இங்கே 'பொருள்' என்றது நற்பொருளை; 'நற்பொருள்காண்மின்' என்பது நோக்குக. 'நாடிய' என்பது வேத சாத்திரங்களாற் பல படியாய் ஆராய்ந்து தெரிந்த என்றபடி; 'நாடி நான் வந்துன் திருவடி யடைந்தேன்'

'நாடிநாடி நரசிங்கா வென்று' என்பன நோக்கத்தகும். கை-செயலுமாம். இங்கு, பொருளும் கையும் (செயலும்) என்பதனுள் உம்மை தொக்கது. ஞானம் – உடலினுள் உயிரைப்பற்றி யெழுவது. புகழ் – உடலின் வெளியே உலகத்தைப்பற்றிப் பரவுவது; ஞானம் என்று அதனால் விளையும் மறுமைப் பயனும், புகழ் என்று அதனால் விளையும் இம்மைப் பயனும் சுட்டப்பட்டன. இயலுதல் - தானாக வந்து கிட்டுதல். இராமன் தோள்வலி கூறுதல் காரணம்; அது நிகழவே அதன் பயன்கள் தாமாக வந்தடைவனவாம் என்றவாறு.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1946-ஞ நவம்பர்மீ த்துச் சந்தா வரவு

			ரூ.	அ.
77	ஸ்ரீ.	K. வீரராகவ ஐயங்கார், வாங்கல்	3	0
78	,,	R. க்ருஷ்ணஸ்வாமி, மாதுங்கா, பம்பாய்	3	0
102	,,	S. ரகுநாதையங்கார், ஆடுதுறை	3	0
148	,,	P. S. வேங்கடாசாரியர், திருப்பத்தூர்	3	0
166	,,	K. ரங்கஸாமி ஐயங்கார், குன்னத்தூர்	6	0
213	,,	S. தேசிக ஐயங்கார், பெரியகுளம்	5	0
242	,,	V. ரங்கஸாமி ஐயங்கார், மைஸூர்	3	0
247	,,	S. நாராயணையங்கார், டாட்ஹண்டர் நகர், ஸைதாப்பேட்டை	3	0
253	,,	K. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், கோவில் வெண்ணி	3	0
265	,,	S. ராமஸ்வாமி ஐயங்கார், பல்லாவரம்	3	0
276	,,	V. சக்ரவர்த்யாசாரியர், கல்யாணபுரம்	3	0
280	,,	தீக்ஷிதர் நாராயணாசார்யர், தில்லஸ்தாநம்	3	0
287	,,	S. N. வேங்கடேச ஐயங்கார், கோயம்புத்தூர்	3	0
383	,,	R. ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை	5	0
387	,,	D. ராமஸ்வாமி ஐயங்கார், வேப்பேரி, சென்னை	3	0
460	,,	R. ராமையங்கார், பார்க்டௌன், சென்னை	5	0
493	,,	A. நரஸிம்ஹையங்கார், ஸ்ரீரங்கம்	3	0
579	,,	A. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கராஜபுரம்	6	0
588	,,	K. ஸ்ரீநிவாஸையங்கார், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி	3	0
632	,,	K. ராஜகோபாலையங்கார், நெல்லிக்குப்பம்	3	0
646	,,	R. ஸ்ரீநிவாஸன், திருவல்லிக்கேணி, சென்னை	3	0
664	,,	S. R. ஸௌந்தரவரதாசாரியர், ஸ்ரீமுஷ்ணம்	3	0
709	,,	T. ரங்கநாதன், பூனா	1	8
731	,,	G. க்ருஷ்ணன், போர்ட், பம்பாய்	1	8
743	,,	S. T. திருவேங்கடாசார்யர், ஸௌமங்கலி	3	0
749	,,	A. ராமஸ்வாமி ஐயங்கார், ஸெகந்தராபாத்	3	0
		ரூ.	87	0

பிழை திருத்தம்:—சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்பட்ட சந்தாவரவு பட்டியலில் "409–ஸ்ரீ. S. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், ஒப்பிலியப்பன் கோவில்—ரூ. 3" என்பதை, "409–ஸ்ரீ. K. A. வீரராகவாசார்யர், ஒப்பிலியப்பன் கோவில்—ரூ 3" என்றும் திருத்திப் படிக்க வேண்டுகிறோம். [ஸம்பாதகர்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ கல்யாணப்ரிவர்த்தநீ ஸபா, மதுராந்தகம்.

ஷை ஸபையின் பொதுக்கூட்டம் ஒன்று 1-10-46 செவ்வாய்க்கிழமை ஸாயம் 2-மணிக்கு ஸ்ரீ. உப. ஸ்ரீகார்யம் வித்வான் ஜோ. ரங்காசார்ய ஸ்வாமி தலைமையில், ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத காலேஜில் நடைபெற்றது. ஸ்ரீ கார்யம் ஸ்வாமி 'ஸ்ரீ விபீஷண ஶரணாகதி' என்னும் விஷயத்தை வித்யார்த்திகளுக்கு நன்கு போதித்தார். அப்போது பாடஶாலாத்யாபகர்கள் யாவரும் குழுமியிருந்தனர்.

ஷை ஸபையின் மற்றொரு பொதுக்கூட்டம் 20-10-46 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-மணிக்கு, பெங்களூர் ஸ்ரீ. உப. B. K. கருடாசார்ய ஸ்வாமி தலைமையில் கூடிற்று. அப்போது A. V. நரஸிம்ஹன் 'ஸம்ஸ்க்ருதம்' என்பதுபற்றிப் பேசினார் பிறகு காலேஜின் தலைமை ஆசிரியர், ஸம்ஸ்க்ருத பாஷையின் சிறப்பைப் பற்றியும், கலாசாலையின் நடவடிக்கைகளைப் பற்றியும் பரக்கக் கூறினார்.

25-10-46 வெள்ளிக்கிழமை ஸாயம் 4½-மணிக்கு, மற்றொரு பொதுக்கூட்டம் வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ. உப. M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி தலைமையில் கூடிற்று. அப்போது P. C. வர்தன் என்னும் மாணவன் 'யோஜோவஹாயாஜஸ்ய' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினான். வித்யார்த்திகள் பலர் அந்த விஷயத்தைப் பற்றிச் சிறிது நேரம் பேசினர். ஸபாத்யக்ஷர் அந்த விஷயத்தை ச்ரோதாக்களுக்கு விளக்கமாக உபதேசித்தார். மங்கல வாழ்த்துடன் ஸபை இனிது முடிந்தது.

ஷை ஸபையின் பொதுக்கூட்டம் 8-12-46 ஞாயிற்றுக்கிழமை ஸாயம் 3½-மணிக்கு ஷை கலாசாலையின் உபதலைமை ஆசிரியரான ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், ஷை கலாசாலைக்கு முதலில் ப்ரின்ஸ்பாலாக இருந்தவரும், இந்த ஸபையை ஆரம்பித்தவருமான ஸ்ரீதிருக்கோட்டியூர் ஸ்வாமியின் ஜந்மோத்ஸவம் கொண்டாடப்பட்டது. அப்போது இவ்வூர் வாஸிகளான யாவரும் கூடியிருந்தனர். பிறகு அக்ராஸநாதிபதி ஸ்வாமியின் குணாதிசயங்களை ஸபையோர்களுக்கு நன்கு எடுத்துரைத்தார். அநந்தரம் ஷை கலாசாலையின் உபாத்யாயர்களும் நன்கு உரைத்தார்கள். பிறகு மங்கள வாழ்த்துடன் ஸபை இனிது கலைந்தது.

ஷை ஸபையின் கூட்டம் 9-12-46 திங்கட்கிழமை ப்ரம்ஹதேசம் ஸ்ரீ. உப. ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கலாசாலையின் உபாத்யாயர்களும் மற்றும் பலரும் கூடியிருந்தனர். பிறகு அக்ராஸநாதிபதி "ஸீதாகல்யாணம்" என்னும் விஷயத்தை நன்கு உபந்யாஸம் செய்தார். பிறகு மங்களவாழ்த்துடன் ஸபை இனிது கலைந்தது.

T. ஸ்ரீநிவாஸன்
T. C. க்ருஷ்ணமாச்சாரி
காரியதர்சிகள்.

* * *

திருப்புல்லாணியில் ஸ்ரீமத் பாரத ப்ரவசநம்

தர்ப்பஶயந மென்னும் ஸ்ரீ புல்லாரண்ய க்ஷேத்ரத்தில், தெற்கு ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில், சென்ற ஆவணிமீ 6உ (22-8-46) முதல், ஸ்ரீமந் மஹாபாரதம் உபக்ரமிக்கப்பட்டு, ஸ்ரீ. உப. வித்வான் ஹேமப்பூர் கோஸகாசார்ய ஸ்வாமியால் ராத்ரி 8-மணி முதல் 10-மணி வரை உபந்யஸிக்கப்பட்டு வருகிறது. தத்தங்குடி

கநபாடி ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி குமாரர் ஸ்ரீ. உப. பாஷ்யமையங்கார் ஸ்வாமி மூல க்ரந்தம் ஸேவித்து வருகிறார். புரட்டாசிமீ 30வ (16-10-46) புதன்கிழமையன்று "த்ரௌபதீ விவாஹ" கட்டம் ஸ்ரீ ஹோஸப்பூர் ஸ்வாமியால் விசேஷித்து உபந்யஸிக்கப் பட்டது. ச்ரோதாக்களான இந்த க்ஷேத்ர வாஸிகள் அனைவரும் அத்யாதரத்துடன் இரண்டு திருநாமங்களுக்கும் விசேஷித்து ஸம்பாவநாதிகள் செய்து கௌரவித்தார்கள். ஷை ப்ரஸங்கம் நிர்விக்நமாய்த் தொடர்ந்து நடந்து வருகிறது.

அ. ஸ்ரீநிவாஸராமாநுஜ தாஸன்
திருப்புல்லாணி.

*　　*　　*

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகர்களின் வார்ஷிக மஹோத்ஸவங்கள்

கத்வால்:—ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளாகப் பரம்பரையாக விளங்கிவரும் மஹாராஜாக்களால் பரிபாலித்து வரப்படும் ஸ்ரீ கேசவ நகர் என்று சொல்லப்படும் கத்வால் ஸம்ஸ்தாநத்தில், ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுக்கும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும் வார்ஷிக மஹோத்வம், வேதபாராயண திவ்ய ப்ரபந்த பாராயணங்களுடன் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. சாத்துமறை யன்று (புரட்டாசி 15வ) ஸ்ரீ கேசவபுஷ்கரிணியிலிருந்து வேதபாராயண வாத்ய கோஷங்களுடன் திருமஞ்ஜந தீர்த்தம் கொண்டு வரப்பட்டு, ஸ்ரீ ஸ்வாமி அன்று விசேஷப்படியான திருமஞ்ஜநம் கண்டருளினர். ராத்ரி வீதி உத்ஸவமும் ப்ரபலமாக நடந்தேறியது. புரட்டாசிமீ 20வ ஸ்ரீ தேசிகன் சாத்துமறை யன்று, க்ருஷ்ணா நதியிலிருந்து வாத்யகோஷ வேதபாராயணத்துடன் திருமஞ்ஜந தீர்த்தம் கொண்டுவரப்பட்டு, மாலோலனுக்கும் திருவேங்கட முடையானுக்கும் ஸ்ரீ தேசிக வள்ளலுக்கும் விசேஷ திருமஞ்ஜநம் நடந்து, அநந்தரம் கேசவ புஷ்கரிணியில் அவப்ருத ஸ்நாநமும் நடந்தது. ராத்ரி வீதி ப்ரமணமும் சாத்துமறையும் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றன. இம்மஹோத்ஸவங்களின் உபயங்களை இவ்விடத்தில் உள்ள பக்தர்களும், விசேஷ உத்ஸவங்கள் ததீயாராதநம் முதலியவைகளை மஹாராணி ஸ்ரீமதி ஆதிலக்ஷ்மிதேவி, மஹாராணி ஸ்ரீமதி லக்ஷ்மீதேவி, ஸ்ரீமதி ஜாநகியம்மா முதலியோரும் பஹு ச்ரத்தையாய் நடத்தி வைத்தார்கள். இவ்வர்ஷம் உபக்ரமிக்கப்பட்ட இம்மஹோத்ஸவங்கள் இனி மேன்மேலும் அபிவ்ருத்தமாம்படி ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹிப்பானாக.

கநபாடி கமலாபுரம். V. ஸந்தாநகோபாலன்.

*　　*　　*

தில்லஸ்தானம் அக்ரஹாரத்தில் சென்ற தைமீ ப்ரதிஷ்டிதமான ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனது வார்ஷிக மஹோத்ஸவம், புரட்டாசிமீ 6வ உபக்ரமமாகி, ப்ரதிதினம் வேதம் ப்ரபந்தம் முதலிய பாராயணங்கள் நடந்துவந்தன. சாத்துமறை யன்று காலை நம் மஹாதேசிகன் ஸகல பரிச்சத ஸஹிதமாய், உபய வேதபாராயணங்களுடன் விலக்ஷணமாகத் திருவீதி உத்ஸவம் கண்டருளினர். பிறகு ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் ஸாதர மங்களாசாஸநம் பண்ணி, மடத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் மங்களாசாஸநம் செய்தருளினர். உள்ளூர் ஸ்ரீநிவாஸப் பெருமாள், பெரும்புலியூர் ஸ்ரீ ஸௌந்தரராஜப் பெருமாள் ஸந்நிதிகளிலிருந்து வந்த ப்ரஸாதங்கள் அருளப்பாடுகளுடன் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. விசேஷமான சாத்துமறையாகி, மத்யாந்ஹம் விஸ்தாரமான திருமஞ்சனமும் நடந்தது.

ஏற்கெனவே ஸ்ரீ மடத்தில் ப்ரதம ப்ரதிஷ்டையில் ஏற்படாத ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ நிகமாந்ததேசிகன், இவர்கள் திருப்ரதிஷ்டைகளும், சென்ற ஆனிமீ 21வ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் நடந்த சிறிய திருவடி ப்ரதிஷ்டையுடன் நடந்தன. ஷை ப்ரதிஷ்டை தில்லஸ்தானம் திருவரங்கமாண்டான் திரு. திரு. திருமலாசார்யர் குமாரர்களால் செய்யப்பட்டது.

இவ்வர்ஷம் வழக்கம்போல் புரட்டாசிச்ரவண தினம் பெரும்புலியூர் ஸ்ரீ தேசிகன், தீர்த்தவாரிக்குத் தில்லைஸ்தானம் எழுந்தருளி ஸ்ரீநிவாஸப் பெருமாள் மங்களாசாஸனம் ஆகி, மடத்திலுள்ள ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் மங்களாசாஸனம் செய்து, ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருப்பரியட்டம் முதலியன ஸாதித்துப் பிறகு காவேரிக்கு அவப்ருதத்திற்கு எழுந்தருளினர். ததநந்தரம் தீர்த்த விநியோகமாகி மீண்டும் பெரும்புலியூருக்கு எழுந்தருளினர்.

தில்லைஸ்தானம்
24—10—46

T. S. சேஷாத்ரி தாஸன்.

* * *

தேரழுந்தூர் :—ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம், ஸ்ரீ அஹோபில மடத்தில், புரட்டாசிமீ 6வ உபக்ரமிக்கப்பட்டு வழக்கம் போல் 9-நாட்களும் அதிவிமர்சையாக நடந்தது. ப்ரதி திநமும் ஸ்ரீ ஸ்வாமியின் திருவீதி ப்ரமணத்தில் 30-பிள்ளைகள் ஸஹஸ்ரநாம பாராயணம் செய்துகொண்டு வந்தனர். அது மிகுந்த சோபையை அளித்தது. சாத்துமறை யன்று விசேஷப்படியான திருமஞ்ஜநத்துக்குப் பின்னர், ஸ்ரீ ஸ்வாமி ஆமருவியப்பன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, ஒவ்வொரு ஸந்நிதியிலும் வழக்கம் போல் மங்களாசாஸநம் செய்தருளினர். அநந்தரம் ஸ்ரீ ஸ்வாமி, தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, அங்கு விசேஷ தளிகைகள் கண்டருளி தீர்த்த விநியோகங்கள் நடந்த பின்னர், வீதி ப்ரமணமாகி மடத்துக்கு எழுந்தருளி யாயிற்று. ராத்ரி விசேஷப்படியாக சாத்துமறை ஸம்ப்ரமமாக நடைபெற்றது. இம் மஹோத்ஸவத்தில் ஸ்ரீ. உப. T. A. ராஜகோபாலையங்கார், ஸ்ரீ. உப. கடாம்பி K. கோபாலையங்கார், மற்றுமுள்ள ஆஸ்திக மஹான்கள், இவர்களுடைய பெருமுயற்சியால் எல்லோருக்கும் விசேஷ ததீயாராதநம் செய்விக்கப்பட்டது.

தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதியில், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபாவின் வார்ஷிக மஹோத்ஸவம், கார்த்திகைமீ 2வ (17-11-46) ஞாயிற்றுக்கிழமை யன்று விசேஷமாக நடைபெற்றது. மதுரை மஹா வித்வான் தார்மிக ரத்ந ப்ரதீப ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (அட்வொகெட்) ஷை ஸபைக்குத் தலைமை வஹித்து "ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் பெருமையும் அர்ச்சாவதாரத்தின் மஹிமையும்" என்பது பற்றி அரிய தொரு உபந்யாஸம் செய்தருளினர். தவிர : ஸ்ரீமதழகிய சிங்கர் அநுக்ரஹத்தால் ஸ்ரீ மடம் முற்றிலும் புதிதாகப் போடப்பட்டுள்ள மின்ஸார விளக்குத் திறப்பு விழாவும், ஸபாவின் புஸ்தகாலயப் படிப்பகத் திறப்பு விழாவும் ஷை ஸ்ரீ க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் நடத்தப் பட்டன.

தென்பரை வித்வந்மணி பகவத் விஷய ராமாயண பூஷணம் ஸ்ரீ. உப. வேங்கட வரதாசார்ய ஸ்வாமியால் ஸ்ரீமத் ராமாயண ப்ரவசநம் ஆரம்பிக்கப்பட்டு ப்ரக்ருதம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

R. நரஸிம்ஹாசார்யர்.

* * *

கல்கத்தா :—ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமே உண்மையான வைதிக ஸித்தாந்தமென்று நிலைநாட்டிய ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன், ஒரு ஸமயம் ஸ்ரீரங்கத்தில் துருஷ்கர்களால் நம் ஸித்தாந்தத்துக்கு ஏற்பட்ட பயத்தைப் போக்கி அபய மளிக்க வேண்டி 'ஸ்ரீ அபீதிஸ்தவம்' என்னும் ஸ்தோத்ரத்தை அருளிச்செய்து அதன் பயனைத் தம் மநோரதத்தை நிறைவேற்றிக்கொண்டா ரென்பது ஸுப்ரஸித்தம். அதை அஸ்மதாதிகள் விஷயத்தில் மெய்யாக்க வேண்டி, ஸ்ரீ தேசிக பக்தர்களும் மற்றுமுள்ள ஆஸ்திக சிகாமணிகளும் அவ்விதமாகவே அந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்திக்க, ஸ்ரீ சரண்யனுடைய அநுக்ரஹத்தினல், தத்ஸமயம் இவ்விடம் ஏற்பட்டிருக்கும் பயம் நிவ்ருத்தியாக, வழக்கம் போல் இந்த ஸம்வத்ஸரத்திலும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன், இவர்களுடைய மஹோத்ஸவங்கள் இனிது நடந்தேறின.

வாங்கல். ந. நாராயண தாஸன்.

*　　　*　　　*

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் 75-வது திருநக்ஷத்ரக் கொண்டாட்டம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதி ப்ரகாரேண எழுந்தருளியிருக்கும் தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனுடைய 75-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம், தஞ்சை ஜில்லா தில்லஸ்தாநம் அக்ரஹாரத்தில், நாளது ஷூ கார்த்திகை மீ 24உ (9–12–46) திங்கட்கிழமை ம்ருகசீர்ஷ நக்ஷத்ரம் கூடிய சுபதிநத்தில் அதிவிமர்சையாக நடைபெற்றது. அம்மஹோத்ஸவத்துக்குத் திருக்குடந்தை, கல்யாணபுரம், வெண்ணாற்றங்கரை, கோயில்வெண்ணி முதலிய ஸ்தலங்களிலிருந்து பல ஸ்வாமிகளும் உள்ளூர் ஸ்வாமிகள் பலரும் எழுந்தருளியிருந்தனர். காலையில் அபிகமநாநந்தரம் ஆசார்ய ஸம்பாவனை நடந்தேறியது. பிறகு ஸ்ரீ ஸ்வாமி, தமது கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தீதிலார் நல்லோர் திரளுடன் உள்ளூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ரமஹா தேசிகன் முதலிய எம்பெருமான்களையும், உள்ளூர் ஸந்நிதியில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள பெருமாள் தாயாரையும் ஹ்ருதயங்கமமாக மங்களாசாஸநம் பண்ணும்படியிருந்தது. அநந்தரம் வெளியூர் ஸ்வாமிகள், உள்ளூர் ஸ்வாமிகள், ஸ்த்ரீகள் உட்பட ஸுமார் 150 திருநாமங்கள் ததீயாராதநத்தில் அந்வயித்தது மன்றி, அவர்கள் "[illegible]" என்றபடி ஷி மஹோத்ஸவத்தை வெகு ச்ரத்தா பக்தியுடன் நடப்பித்தனர்.

தில்லஸ்தாநம் }
11–12–46 }

R. வீராஸ்மி ஐயங்கார்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இன்னும் இரண்டு மாஸங்களுக்குத் திருவெவ்வுளூரிலேயே எழுந்தருளியிருந்து அங்கிருந்தபடி பக்த கோடிகள் எல்லாரையும் கடாக்ஷித்து அநுக்ரஹிக்கப் போவதாகத் தெரிகின்றது. திருவெவ்வுளூரில் இப்பொழுது ஜலம் முதலிய ஸௌகர்யங்கள் ஸம்ருத்தங்களாக இருக்கிறபடியால், அவ்விடத்தில் இன்னும் கொஞ்சகாலம் நீடித்து வஸிப்பதில் பரிஜனங்களுக்கு ச்ரமம் ஏற்படுவதற்குக் காரணமில்லை. மேலும், அநேக காரணங்களால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்குத் திருவெவ்வுளூரில் ஆதராதிக்ய முண்டு என்பது ப்ரஸித்தம். அவனுடைய ஸாந்நித்யத்தால் திருவெவ்வுளூரும் அந்யாத்ருசமான ஸௌபாக்யத்தை அநுபவித்து வருகிறது. வருகிற தை மாஸத்தில் வார்ஷிக வித்வத் ஸதஸ்ஸும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் அவ்விடத்திலேயே நடைபெறும். இது மிகவும் உபபந்நமே.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன்

இப்பொழுது காங்க்ரெஸ் ராஜ்யம் நடக்கின்றது. இனி தேசத்திற்கு ஸகல விதமான க்ஷேமமும் நேரப் போகிறதாம். ஜாதி வ்யத்யாஸம் ஒழியப் போகிறதாம். ஆலயங்களில் மஹா ஜனங்கள் எல்லோரும் பரஸ்பரம் ஒருமிக்க எவ்வித உயர்வு தாழ்வுகளையும் பாராட்டாமல் கூழாங்களாகச் சேர்ந்து பகவானைத் தொழுவார்களாம். இது, சிரகாலமாகக் காங்க்ஷிதமான புருஷார்த்தம். இது பர்யந்தம் சாஸ்த்ரமென்று ஒரு ப்ரமாணத்தை நம்பி, ஸ்த்ரீ புருஷர்களைச் சிற்சில கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி, லோகஸ்திதியை நடத்தி வந்தோம். அந்த நிர்ப்பந்தங்களெல்லாம் ஒழிந்துவிடப் போகின்றனவாம். எல்லா ஜனங்களும் ஸர்வ ஸ்வாதந்த்ர்யத்தைப் பெற்றுப் பரமாநந்தத்தை அநுபவிக்கப் போகிறார்களென்று நாலு பக்கங்களிலும் உத்கோஷிக்கப்படுகின்றது. அப்படிப்பட்ட தசை வந்தால் அது நமக்கு இஷ்டமே. குருடன் வேண்டுவது கண்தானே. நாம் அபேக்ஷிப்பது துக்க நிவ்ருத்திதானே.

காங்க்ரெஸ் ராஜ்யத்தின் பெருமை

“ 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍋𑌷𑌃 𑌸𑍋𑌽𑌹𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 । 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ”

என்பது தானே நமது உத்தேச்யம். அதைக் காங்க்ரெஸ் ராஜ்யம் இவ்விடத்திலேயே நமக்கு ஸாதித்துக் கொடுக்கும் பக்ஷத்தில் நாம் வைகுண்ட வாஸத்தைத் தேடுவானேன் ?

ஆனால் காங்க்ரெஸ்காரர்களுடைய மதமும் மனோரதமும் எப்படிப் பட்டவை யென்று ஶாஸ்த்ர வச்யர்களான நாம் நிஷ்பக்ஷபாதமாக ஆராய்ந்து பார்க்கலாம். இவர்கள் மனோரதிப்பது, ஜகத்தின் ஸ்திதியைக் கொஞ்சமேனும் அறியாத சிறு குழந்தைகள் மனோரதிப்பதற்குத் துல்ய மென்போம். ஏனெனில்: புருஷ புத்தியால் செய்யப்படும் வ்யவஸ்தைகள் நிலைபெறும் வ்யவஸ்தைக ளாகுமோ? இந்தப் புத்தி எவ்வளவு தூரம் எட்டும்? வஸ்துக்களின் ஸ்வபாவத்தை யதாவஸ்திதமாக அறிவதற்கு நமது புத்திக்கு யோக்யதை உண்டா? இதைக் கணிசித்தன்றோ நமது மஹர்ஷிகள் தமது யோக மஹிமையால் வஸ்து ஸ்திதியை ஸாக்ஷாத்கரித்து, வழி தெரியாமல் தடுமாறும் நம்முடைய நன்மைக்காக ஶாஸ்த்ரங்களைச் செய்து வைத்திருக்கிறார்கள். அவை நமது நன்மையின் பொருட்டும் க்ஷேமத்தின் பொருட்டுமே ஏற்படுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன என்பதைக் கொஞ்சமேனும் உணராததோடு, அவற்றில் நாம் த்வேஷத்தைச் செய்து ஆபாத ரமணீயமான துறையில் இறங்குவது புத்திமத்க்ருத்ய மாகுமா? இரவில் பட்டிக்குள் அடைப்பதை த்வேஷித்துத் தனியாக வெளியில் படுத்துறங்கிப் புலிக்கு இரையான ஆட்டுக் குட்டியின் கதை இந்த ஸந்தர்ப்பத்தில் நமது ஞாபகத்தில் வருகிறது.

“யஃ ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரதஃ ।
ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ॥”

என்பது ஸ்ரீ கீதாசார்யனுடைய ஶபதம். ஸமோத்ர விவாஹ நிஷேதம் ஜாதி பேதம் இன்னும் இவை போன்ற வ்யவஸ்தைகளை ஒழிப்பது ஜகத்துக்கு நன்மையைச் செய்யக்கூடிய சீர்திருத்தங்க ளாகுமா?

காங்க்ரெஸ் அரசியலாரை நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்க வேண்டிய தொன்றுண்டு. இவர்கள் நமது ஶாஸ்த்ரங்களைத் திருத்த ப்ரவேசியாமல், மஹா ஜனங்களுக்கு ஹிதமான ஐஹிக ஸௌகர்யங்களை ஸம்பாதித்துக் கொடுக்க ப்ரயத்நப்பட்டால், இவர்கள் ஜகத்திற்கு நன்மை செய்தவ ராவர் என்பதே. இதனை நாம் அவர்களிடம் ஸவிநயம் விண்ணப்பம் செய்து கொள்கிறோம்.

* * *

ஸ்வராஜ்ய லாபமும் அதன் பயனும்

ஏற்கெனவே ஒரு தடவை நாம் ஸ்வராஜ்ய லாபத்தைப்பற்றி நமது பத்ரிகையில் விசாரித்திருந்தோம். ‘இந்த லாபம் ஸர்வ ப்ரகாரங்களிலும் நமக்கு அநுகூலம்தானா? இல்லாவிட்டால் இதனால் நமக்குப் பாதகம் ஏதாவது நேருமா?’ என்ற ஒரு ஶங்கையை நாம் அப்பொழுது வெளியிட்டிருந்தோம். நமது ஶங்கை ஆதாரமற்றது என்று சொல்லக் கூடாத படி ஸம்பவங்கள் சில நடந்து வருகின்றன. வங்காளத்திலும் பீஹாரிலும் பம்பாயிலும் நடைபெற்ற அட்டூழியங்களை நினைக்க மனஸ் நடுங்குகின்றது. “ஐஶ்வர்யம் ஶத்ருஸாக்ஷிணா” [ஐச்வர்யம் வந்தால் அதனுடன் ஶத்ருக் களும் வருவார்கள்] என்பது ஒரு பழமொழி. ஒருவருக்கு ஒருவித ஐச்வர்யம் ஸம்பவித்தால் அவரைச் சுற்றியிருக்கும் ஜநங்கள், தமக்கு அந்த

ஐச்வர்யம் வரவில்லையே யென்று வருந்தி, அவருக்குக் கிடைத்துள்ள ஐச்வர்யத்தைத் தாம் அபஹரித்துக்கொள்வதற்கோ, அல்லது அதில் ஒரு பாகத்தைத் தாம் அடைவதற்கோ மஹத்தான ப்ரயத்நத்தைச் செய்வார்களன்றோ? நாம் அதை அபேக்ஷிக்கக் காரணம் எது என்பதை அவர்கள் ஆலோசிப்பார்களா? இது குணத்ரய வச்யர்களான ஜநங்களின் ஸ்திதி.

ப்ரக்ருதத்தில் இந்த ஸ்வராஜ்ய லாபம் துருஷ்க ஜாதீயர்களுக்குப் பெருத்த ஆக்ரஹத்தை ஜநிப்பித்திருக்கிறது. அவர்கள் இந்தத் தேசத்தை இரண்டாகப் பிரித்து, தமக்கென்றே ஒரு பாகத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அதில் தாமே ராஜ்ய நிர்வாஹத்தைச் செய்துகொண்டு வரவேண்டுமென்றும், மற்றொரு பாகத்தில் ஹிந்துக்களே ராஜ்யத்தைப் பரிபாலிக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். இதை உத்தேசித்துத் தமது பாகத்திலுள்ள ஹிந்துக்களை அப்புறப்படுத்தி, மற்றொரு பாகத்திலுள்ள துருஷ்கர்களைத் தமது பாகத்துக்கு வரவழைத்துக்கொள்ளவேண்டுமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். ஹிந்துக்களோ, 'தேசத்தைப் பிரிக்க வேண்டாம்; இரண்டு பெயர்களும் ஒன்றாகச் சேர்ந்து நாடு முழுவதையும் ஒற்றுமையுடன் பரிபாலித்து வரலாம்' என்று வாதிக்கிறார்கள். இது, ஒரு பெரிய குடும்பத்தில் இரண்டு ப்ராதாக்கள் சச்சரவு செய்துகொள்வதுபோலவே இருக்கிறது. ஒத்து வஸித்தால் அது ச்ரேஷ்டமே. ஒத்து வராவிட்டால் பிரித்து விடுவது தான் ச்லாக்யமென்று நமக்குத் தோன்றுகிறது. அப்படிப் பிரிப்பதால் தேசத்துக்குப் பலக் குறைவு ஏற்படலாம். ஆனால் ஒன்றாக இருந்து எப்பொழுதும் சச்சரவு செய்துகொண்டு ஒருவரை யொருவர் கொன்று நாசம் செய்துகொள்வதைக் காட்டிலும் பிரிந்து போவதே புத்திமத்க்ருத்ய மாகு மன்றோ? ஒருபொழுதும் ஒத்துழைக்கும் சீல மில்லாதவர்களைச் சேர்த்து வைப்பது இருவருக்கும் தீமைக்குக் காரணமாகும். இவ்விதம் நாம் அபிப்ராயப்படுவதிலிருந்து நாம் பாகிஸ்தானை ஆதரிப்பதாக நமது ஸுஹ்ருத்துக்கள் நினைக்கக்கூடாது. குண தோஷ தாரதம்யத்தைப் பார்த்தே, தோஷம் குறைவாக இருக்கும் மார்க்கத்தைப் பாராட்டுகிறோமே யொழிய, அதில் அபிமாநத்தின் பேரில் இவ்வாறு நாம் பேசவில்லை. இந்த இரண்டு ஜாதீயர்களும் ஒத்து வாழும் ஸ்வபாவ முள்ளவர்க ளல்ல ரென்பது நமது அபிப்ராயம். அது பகவத் ஸங்கல்பம்.

"யன்மவிஷ்வஹிதாதாத நைதந்யஸ்வராவயோ:।
ஸௌஹார்தம் ப்ராத்ருயுக்தம் ஹி ததிதம் தாத நாந்யதா ॥"

என்னும் வாலியின் உக்தி நமக்கு ஜ்ஞாபகம் வருகிறது.

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியை வெளியீட்டின் விளம்பம்

இந்த மாஸத்து ஸஞ்சிகை கொஞ்சம் விளம்பித்து வெளிவரும்படி நேர்ந்ததைப்பற்றி நாம் மிகவும் வருந்துகிறோம். இதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று: விடாப் பெருமழை. அச்சாபீஸ் வேலைக்காரர்கள் மழை உபத்ரவத்தால் சரியானபடி வேலைக்கு வரவில்லையென்றும், அதனால் வேலை தவக்கப்படுகிற தென்றும், அச்சாபீஸ் அதிகாரிகளிடமிருந்து நமக்குச் செய்தி வந்திருக்கிறது. இரண்டாவது காரணம்: நமக்குக் காகிதம் கொடுத்து வரும் வ்யாபாரிகள், 'இம்மாதத்துக் காகிதமெல்லாம் வேறு விதமாகச் செலவாகி விட்டதென்றும், மறுபடியும் காகித வரவு இந்த மாஸம் மூன்றாவது வாரத்தில் தான் எதிர்பார்க்கப்படுகிற தென்றும், அது கிடைத்தவுடன் நமக்குக் கொடுக்கவேண்டியது கொடுக்கப் படும் என்றும் ஸமாசாரம் சொல்லியனுப்பி விட்டார்கள். இவ்விரண்டு விக்நங்களுக்கும் எவ்வித ப்ரதீகாரமும் இராததால், நாம் அவைகளுக்கு இணங்கி நிற்கும்படி நேர்ந்துவிட்டது. இந்த ஸம்பவத்தை நமது ஸஹ்ருத்துக்களான சந்தாதாரர்கள் பொறுத்துப் போகவேணு மென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

காகிதப் பஞ்சம் பெரிதாக இருக்கிறது. ஆனால் சில பாக்யஶாலிகளுக்குக் காகிதம் யதேஷ்டமாகவும் கிடைக்கின்றது. அநேக பத்ரிகைகள் எவ்வித பஞ்சத்தையும் உணராதவைகளாய் நல்ல புஷ்டியுடன் வெளிவருவதை நாம் பார்க்கிறோம், நமது 'ப்ரியை' மாத்ரம் இளைத்தே யிருக்கின்றது. இதற்குக் காரணம் நாம் என்ன சொல்லக் கூடும்? "ஶாஜநு கநகயாஶா ஹிஷயி ஸவத்ரு வஷதி। கஹா ஸ்ருது ஸம்ஶஜெ உயி நாயாஷி ஸிம்ஶவ:॥" என்பதை நினைத்து மௌநமா யிருக்க ப்ராப்தம்.

Regd. M. No. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

கீழே குறிப்பிட்டுள்ள புஸ்தகங்கள் விற்பனைக்கு (விலை சரஸமாய்க்) கிடைக்கும்.

[Second hand books for Sale at the cheapest rate]

... THE REGISTRA...
15 JAN 1947
MADRAS

			ரூ. அ.
1.	ஸ்ரீ மஹா பாரதம் [ஸவ்யாக்யாநம்; தெலுங்கு அக்ஷரம்] 3 ஸம்புடங்கள்		
	முதல் ஸம்புடத்தில்:— ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்யோக பர்வங்கள்		
	இரண்டாம் ஸம்புடத்தில்:— பீஷ்ம, த்ரோண, கர்ண, ஶல்ய, ஸௌப்திக, ஸ்த்ரீ பர்வங்கள்		
	மூன்றும் ஸம்புடத்தில்:— ஶாந்தி, அநுஶாஸந, அச்வமேத, ஆச்ரமவாஸ, மௌஸல, மஹாப்ரஸ்தாந, ஸ்வர்க்காரோஹண பர்வங்கள்	...	40—0
2.	ஸ்ரீமத்பாகவதம் [ஸ்ரீதரீய வ்யாக்யாநம்; தெலுங்கு அக்ஷரம்] 2 ஸம்புடங்கள்		
	முதல் ஸம்புடத்தில்:—1 முதல் 9 ஸ்கந்தங்கள் வரை		
	இரண்டாம் ஸம்புடத்தில்:—10, 11, 12 ஸ்கந்தங்கள்	...	20—0
3.	ஹரிவம்சம் [தெலுங்கு அக்ஷரம்]	...	6—0
4.	உத்தர ஸ்ரீ ராமாயணம் [தெலுங்கு அக்ஷரம்; ஸ்ரீ கோவிந்த ராஜீய வ்யாக்யாந ஸஹிதம்]	...	3—0
5.	திநகரீ, முக்தாவலீ, காரிகாவலி, ராம ருத்ர பட்டி. [நாகராக்ஷரம்]	...	5—0
6.	லீலாவதி [ஸவ்யாக்யாநம்; நாகராக்ஷரம்]	...	5—0
7.	நிக்ஷேபரக்ஷா, நிக்ஷேப சிந்தாமணி, வேதாந்த கௌஸ்துபம் [க்ரந்தாக்ஷரம்]	...	5—0
8.	பாலமநோரமா [க்ரந்தாக்ஷரம்]		3—0
9.	ஸ்ரீ ஸந்நிதி திருவாராதநச் சுருக்கம்	...	0—4

இப்புத்தகங்கள் பழையனவாயினும் நல்ல நிலையில் உள்ளன. இவைகளை வாங்குவோர்க்கு நூற்றுக்கு 20 விதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. இவைகளை அபேக்ஷிப்பவர்:—

K. ஸுதர்சநாசார்யர்,

3, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, (மதராஸ்-15)

என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
& Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.